# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.132 /2020

## 12.06.2025

## D.W.1- மொக்கராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 3ம் வகுப்புவரை படித்துள்ளேன். வழக்கில் வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ,10 ஆவணத்தில் வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 55 சென்டும் வாதிகளின் தகப்பனாரான மொக்கமாயத்தேவருக்கு பாத்தியப்பட்டது என பட்டா உள்ளது என்றால் சரியல்ல. அது எங்களின் பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்களின் கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.3ல் கண்ட இளையபெருமாள் என்ன எப்படி சொந்தம் என்று நிருபண வாக்கமூலத்தில் தெரிவிக்கவில்லை. வாதிகள் ஆவணத்தில் சொல்லியுள்ள க.ஒச்சாத்தேவர், க.ஒ.ஒச்சாத்தேவர் ஆகியோர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. வாதிகள் எனக்கு சொந்தம் கிடையாது. என் தாத்தா பெயர் இளையபெருமாள்த்தேவர் மகன் ஒச்சாத்தேவர் ஆவார். எனது அப்பா பெயர் ஒச்சாத்தேவர் மகன் பெருமாள்த்தேவர் ஆவார். ஒச்சாத்தேவர் என்ற பெயர் இருக்கும் காரணத்தினால் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்யாக ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாதிகளின் தகப்பனார் மொக்கமாயத்தேவர் மைனராக இருந்த காலத்தில் தாவா சொத்தின் விஸ்தீரணமாக 2 ஏக்கர் 55 சென்டும் அவருக்கு கொடுக்கப்பட்டு, கார்டியனாக மேலே கண்ட க.ஒச்சாத்தேவர், க.ஒ.ஒச்சாத்தேவர் ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. எனது நிருபண வாக்குமூலம் 5வது பாராவில் தனிப்பட்ட முறையில் எங்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்திலும், அதன் சொத்து விவரத்திலும், நான்கு மாலிலும் எனது பெயரோ, எனது

முன்னோர்களின் பெயரோ இல்லையென்றால் தெரியாது. தாவா சொத்து 1957லிருந்து வாதிகளின் தகப்பனார் மொக்கமாயத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டுவரை தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருக்கிறது என்றாலும், வாதிகளின் ஆவணங்களை பார்க்காமல் நான் தவறாக கட்சி செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. ஆவண மோசடி சம்மந்தமாக நாங்கள் வாதிகளிடம் ஒச்சாத்தேவர் பெயரை குறிப்பிட்டு நாங்கள் சொன்னதை நம்பி வாதிகள் எங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2019ல் வாதிகள் ஆவண மோசடியை தெரிந்துகொண்டு வாதிகள் எங்களிடம் சொத்தை கொடுக்குமாறு கேட்டார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1, 2 வருவாய் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் தொலைந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் நகல்களை எடுக்க முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12, 13 ஆவணங்கள் மோசடியானது என்பதால் அவைகள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால
கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி